## 1. அன்பு தேவனின் அன்பு

அன்பு தேவனின் அன்பு
அதை ஒருவரும் அளந்திட முடியாது
அளந்திட முடியாது அதை (2)
- அன்பு

1. மனிதனின் அன்பொரு நாள்
மாறியே போய் விடலாம் இம் (2)
என் தேவனின் அன்பென்றுமே
மாறாத அன்பு ஐயா (2)
- அன்பு

2. என் கண்ணில் நீர் வழிந்தால்
உம் கண்கள் கலங்கிடுதே (2)
என் கால்கள் சறுக்கும் போது
தாங்கியதுமதன்பு தான்
- அன்பு

3. இயேசுவை தந்தருளி
உலகினில் அன்பு கூர்ந்தார் (2)
சிலுவையில் ஜீவன் தந்து
நேசித்த அன்பிதுதான்(2)
-அன்பு

## 2. இம்மட்டும் காத்திட்ட

இம்மட்டும் காத்திட்ட
இம்மட்டும் காத்திட்ட எபிநேசரே
இனிமேலும் காத்திடும் நல்நேசரே
பாவியாயிருந்த என்னையுமே
பரிசுத்தமாக்கின என் தெய்வமே (2)

உந்தன் நல்ல நாமம் வாழியவே (4)

1. சோதனை சூழ்ந்திட்ட நேரங்களில்
சோராமல் காத்தவர் அவரல்லவா-(2)
வேதனை துன்பம் நீக்கி தினம்
வழுவாமல் காத்தவர் அவரல்லவா- (2)
- உந்தன் நல்ல

2.மனிதர்கள் கைவிட்ட நேரங்களில்
துணையாக நின்றவர் அவரல்லவா-(2)
பெலவீனம் தாக்கின நேரங்களில்
பெலத்தால் தாங்கினதவரல்லவா-(2)
-உந்தன் நல்ல

3.அழுது புலம்பின வேளைகளில்
கண்ணீரை துடைத்தவர் நீரல்லவா-(2)
கலங்கி தவித்த வேளைகளில்
கலங்காதே என்றவர் நீரல்லவா-(2)
- உந்தன் நல்ல

GOD'S LOVE MINISTRIES

## 3. வல்லமையின் தேவன்

வல்லமையின் தேவன்
உன்னோடிருப்பதால்
வல்லபெரும் காரியங்கள் செய்திடுவார் (2)
நல்லவர் சர்வ வல்லவர் (2)

1. சத்துருவை ஜெயிக்க பெலன் தருவார்
சாபங்களை முறிக்க பெலன் தருவார்- (2)
-வல்லமையின்
2. தடைகளை உடைக்க பெலன் தருவார்
சோதனையை ஜெயிக்க பெலன் தருவார்-(2)
-வல்லமையின்
3. வியாதிகளை ஜெயிக்க பெலன் தருவார்
சோர்வின்றி நடக்க பெலன் தருவார்- (2)
-வல்லமையின்
4. ஆசீர்வாத மழையை ஊற்றிடுவார்
அதிசயமாக நடத்திடுவார்-(2)
-வல்லமையின்

## 4. அதிகாலை நேரம்

அதிகாலை நேரம் அபயமிட்டேன்
அழுது புலம்பினேன்- (2)
கண்ணீரின் ஜெபம் கேளும்
என் பெருமூச்சை கேட்டருளும்-(2)
-அதிகாலை நேரம்

1.மரண திகில் என்மேல் விழுந்தது
பயமும் நடுக்கமும் பிடித்தது - (2)
வியாகுலம் என்னை மூடிற்று
மீட்டுவார் இல்லையோ
கலங்கி தவிக்கின்றேன் நான்
-அதிகாலை நேரம்

2.நிந்தனை என்னை சூழ்ந்தது
கண்ணிகள் என் மேல் விழுந்தது - (2)
ஆத்துமா தோய்ந்து போயிற்று
ஆதரிப்பார் இல்லையோ
கலங்கி தவிக்கின்றேன் நான்
-அதிகாலை நேரம்

3.உனக்கு எதிராய் எழும்பிடும்
ஆயுதங்கள் வாய்க்காதே-(2)
உள்ளங்கையில் வரைந்துன்னை
உயர்த்தி மகிழ்ந்திடுவேன்
கலங்காதே நெஞ்சமே
-அதிகாலை நேரம்

GOD'S LOVE MINISTRIES

GOD'S LOVE MINISTRIES

## 5. ஏன் கலங்குகிறாய்

ஏன் கலங்குகிறாய் (2)
நெஞ்சமே ஓ நெஞ்சமே- 2
உனக்கு ஜெயம் கொடுக்கும் தேவன் உண்டு கலங்காதே
உன்னை வெற்றி சிறக்க பண்ணிடுவார் திகையாதே-(2)
நெஞ்சமே...ஓ நெஞ்சமே....

1. பாவசாபம் உன்னை வந்து மூடினபோது
பரிசுத்தமாய் வாழச் சொல்லி வழிகாட்டினார்- (2)
நோயின் பிடியில் நீ உழன்றுத் தவித்தபோது
விடுதலை கொடுத்து உன்னை வாழச் செய்திட்டார்- (2)
நெஞ்சமே...ஓ நெஞ்சமே....

2.கடன்பாரம் உன்னை வந்து வாட்டினபோது
கலங்காதே என்று சொல்லி எனை தேற்றினார்-(2)
ஜெயம் நிறைந்த வாழ்க்கையை உனக்குத் தந்து
ஆசீர்வாதத்தால் உன்னை நிரப்பி மகிழ்ந்தார்-(2)
நெஞ்சமே...ஓ நெஞ்சமே....

3.பாலைவனமான உந்தன் வாழ்க்கையைக் கண்டு
சோலைவனம் ஆக்கினாரே நீதியின் தேவன்-(2)
இனிய கானான் உனக்கு உண்டு என்று சொல்லி
செழிப்பான பாதையிலே நடத்தி மகிழ்ந்தார்-(2)
நெஞ்சமே...ஓ நெஞ்சமே....
-ஏன் கலங்குகிறாய்

## 6. அன்பரின் பாதத்திலே

அன்பரின் பாதத்திலே
ஓர்நாள் நான் விழுந்து கிடந்தேன்
அன்போடு என்னை அழைக்கின்றார்
அன்போடு என்னை அனைக்கின்றார்
- அன்பரின் பாதத்திலே
அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா ஆமேன்

1. இருகரம் விரித்தவராய்
இதயத்தை திறந்தவராய்- (2)
ஏங்கி ஏங்கி அழைக்கின்றார்
விரும்பி விரும்பி ஓடி நீ வா- (2)

நம்பி வா..... நம்பி வா.... (2)
பாவத்தை விட்டு எழுந்து வா
உன் சாபத்தை விட்டு எழுந்து வா
- அன்பரின் பாதத்திலே

GOD'S LOVE MINISTRIES

2.கண்ணீரை துடைத்திடுவார்
நிந்தையை மாற்றிடுவார்-(2)
அழுது அழுது ஏன் நிற்கின்றாய்
எழுந்து எழுந்து ஓடி நீ வா -(2)
- நம்பி வா

3.வியாதியை மாற்றிடுவார்
கடன்தொல்லை தீர்த்திடுவார்-(2)
கலங்கி கலங்கி ஏன் நிற்கின்றாய்
மகிழ்ந்து மகிழ்ந்து ஓடி நீ வா-(2)
- நம்பி வா

## 7. உன்னை மறப்பேனோ

உன்னை மறப்பேனோ
சொல் என் மகனே (என் மகளே)
இமைப்பொழுதில் மறைத்தது உண்மை
ஆனாலும் கிருபையாய் இரங்கினேன்
-உன்னை மறப்பேனோ

1. வாழ்நாளெல்லாம் நீ மகிழ்வுடன் வாழ
கிருபையினால் உன்னை நிரப்பிடுவார்-(2)
நன்மையும் கிருபையும் பொழிந்து உன்னை (2)
நீடித்த நாட்களாய் நிலைக்க வைப்பார்
-உன்னை மறப்பேனோ

2.சத்திய வேதத்தை தியானித்திட
வரங்களினால் உன்னை நிரப்பிடுவார்-(2)
கிருபையும் வரங்களும் பொழிந்து உன்னை(2)
அபிஷேகத்தாலே நிரப்பிடுவார்
-உன்னை மறப்பேனே

3.நீதியில்லா இவ்வுலகினிலே
நீதிக்காய் நீயும் அலைகையிலே-(2)
கிருபையும் நீதியும் பொழிந்து உன்னை(2)
ஆர்ப்பரித்தென்றும் மகிழச்செய்வார்
-உன்னை மறப்பேனோ

GOD'S LOVE MINISTRIES

## 8. நிம்மதி எங்கே

நிம்மதி எங்கே எங்கே என்று
தேடி அலைந்தேன் நான்
அந்த நிம்மதியை தரும் இயேசுவிடம் தஞ்சம்
புகுந்தேன் நான்-(2)

1.குடும்ப வாழ்க்கையில் நிம்மதியில்லை
வேலை ஸ்தலத்தில் நிம்மதியில்லை
நண்பர் மத்தியில் நிம்மதியில்லை
நிம்மதியே இல்லை
-நிம்மதி எங்கே

2.வியாதியின் மத்தியில் நிம்மதியில்லை
தோல்வியின் மத்தியில் நிம்மதியில்லை
தூங்கும்போதிலும் நிம்மதியில்லை
நிம்மதியே இல்லை
-நிம்மதி எங்கே

3.கடன் பாரத்தால் நிம்மதியில்லை
பாவ வாழ்க்கையால் நிம்மதியில்லை
சாப வாழ்க்கையால் நிம்மதியில்லை
நிம்மதியே இல்லை
-நிம்மதி எங்கே

## 9. என் மகனே

என் மகனே என் போதகத்தை
நீ மறவாதே
அவைகளைக் காத்து நடந்துக்கொள்-(2)
1. உன் வழிகளெல்லாம் அவரை
நினைத்துகொள்
உன் பாதைகளை செவ்வைப்படுத்தி நடத்துவார்-(2)
உன்னை ஞானியென்று எண்ணிக்கொள்ளாதே
தீமையை விட்டு விலகிடு- (2)
- என் மகனே

2.உன் முதற்பலனால் கர்த்தரை கனம்பண்ணு
உன் களஞ்சியம் புரணமாய் நிரம்பிடும்-(2)
உன்னை கடியும்போது சோர்ந்துபோகாதே
சோர்வை நீ விட்டு விலகிடு-(2)
-என் மகனே

3.வேதத்தையே தியானித்து ஜெபம் பண்ணு
பயப்படாமல் அதின்படி நடந்திடுவாய்-(2)
திகிலின்போது அஞ்சி விடாதே
அவரையே அண்டி பற்றிக்கொள்-(2)
- என் மகனே

GOD'S LOVE MINISTRIES

## 10. பயப்படாதே நான்

பயப்படாதே நான் உன்னுடன் இருப்பேன் என்றார்
திகையாதே நான் உன் தேவன் என்றார்-(2)
உன்னை பெலப்படுத்தி சகாயம் செய்திடுவேன்
நீதியின் கரத்தால் உன்னை தாங்கிடுவேன்
- பயப்படாதே

1. வியாதியோ துன்பமோ
வேதனை நெருக்கமோ-(2)
எந்தனின் வாழ்க்கையில்
குறுக்கிட முடியாது-(2)
- பயப்படாதே

2.பெருவெள்ளம் சூழ்ந்ததோ
கொடுங்காற்று வீசிற்றோ-(2)
சேதமே அணுகாமல்
உன்னையும் தாங்குவார்
- பயப்படாதே

3.மாறிடும் உலகினில்
மனிதர்கள் பகைக்கையில்-(2)
கரத்தினை நீட்டியே
மார்போடு அனைப்பாரே-(2)
- பயப்படாதே

GOD'S LOVE MINISTRIES